UTL MEDIA

# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

C 8044398

1. District: **Vellore** P.S.: **Vigilance & Anti-Corruption** Year: **2021** FIR No.: **16/2021** Date: **03.11.2021**

2. (i) Act: **PC Act 1988 as amended by PC (Amendment) Act 2018** Sections: **7 of PC (Amendment) Act 2018**

(ii) Act: Sections:

(iii) Act: Sections:

(iv) Other Acts & Sections:

3. (a) Occurrence of Offence Day: Date from **02.11.2021** Date to:

Time Period: Time from: Time to:

(b) Information Received at P.S. Date: **03.11.2021** Time: **02.00 hrs**

(c) General Diary Reference: Entry No(s): **Volume - III 2021** Time: **03.11.2021 @ 02.00 hrs**

4. Type of Information: Written/ Oral: **- written**

5. Place of Occurrence (a) Direction and Distance from P.S.: **- A km South**

Beat Number: (b) Address: **O/o the Executive Engineer, PWD, Technical Education Division, Vellore In Continuation of Sudha restaurant, Thorapadi to Ariyur Road, Vellore**

(c) In case outside limit of this Police Station, then the Name of P.S.: District:

6. Complainant/Informant (a) Name: **C. Murugan** (b) Father's/Husband's Name: **Chinnasamy**

(c) Date / Year of Birth: **05.04.1968** (d) Nationality: **Indian** (e) Passport No.:

Date of Issue: Place of Issue:

(f) Occupation: **Deputy Inspection cell officer** (g) Address: **Inspection Cell office, Collectorate Campus Sathuvachari, Vellore - 9.**

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)

**Tmt. C.N. Shobana, Executive Engineer, Public works Dept., Technical Education Division, Thanthai Periyar Government Polytechnic Campus, Thorapadi, Vellore.**

8. Reasons for delay in reporting by the complainant / Informant:

**- No delay -**

[illegible]

UTL MEDIA

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10 Total value of properties stolen / involved : —
களவாடப்பட்ட / சம்பந்தப்பட்ட சொத்துக்களின் மொத்த மதிப்பு

11. Inquest Report / Un-natural death Case No. if any: —
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால்

12. FIR Contents (Attach separate sheet, if required)
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Separate sheet enclosed

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed .................... Rank .................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS.......................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டின் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .................... பதவி .................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .................... காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன்படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

03/11/2021

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

03/11/2021
Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
03.11.2021 @ 05.00 hrs

Name/பெயர் S. Vijay
Rank/பதவி Inspector of Police, Vigilance & Anti-Corruption, Vellore

GCP-240-34(Type-2) 80,000 Cps -21.9.18(HCL-12)p.2

UTL MEDIA

**SUBMITTED:**

இன்று 03.11.2021-ஆம் தேதி அதிகாலை 01.30 மணியளவில் நான் நிலைய ஆஜரில் இருந்தபோது, திரு.C.முருகன், ஆய்வுக்குழு துணை அலுவலர், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர், வேலூர் மாவட்டம் என்பவர் நேரில் ஆஜராகி கொடுத்த புகாரை பெற்று பார்க்க, அதன் விவரம் பின்வருமாறு: அனுப்புநர், C. முருகன், மாவட்ட துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9 பெறுநர், காவல் ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, வேலூர். அய்யா, நான் தற்போது வேலூர், ராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்களுக்கான மாவட்ட துணை ஆய்வு அலுவலராக பணிபுரிந்து வருகிறேன். 02.11.2021-ஆம் தேதி இரவு சுமார் 21.00 மணியளவில், வேலூர் மாவட்டம், தொரப்பாடி தந்தை பெரியார் அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை (PWD) தொழில்நுட்ப கல்வி கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்தில் செயற்பொறியாளராக பணிபுரியும் திருமதி.ஷோபனா என்பவர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகளுக்குண்டான Bill Sanction செய்வதற்காகவும், காசோலைகளை வழங்குவதற்காகவும் மற்றும் இதர வேலைகளுக்காகவும் இலட்சக்கணக்கில் கையூட்டு பெறுவதாக கிடைத்த நம்பகமான தகவலினை நான் என்னுடைய நம்பகமான தகவலாளர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, வேலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு காவல் ஆய்வாளர் திரு.M.ரஜினிகாந்த் அவர்களுக்கு 02.11.2021-ஆம் தேதி இரவு சுமார் 21.15 மணிக்கு தகவல் தெரியப்படுத்தி, அதன் பிறகு நானும் காவல் ஆய்வாளர் மற்றும் குழுவினர் அரசு வாகனத்தில் அலுவலகத்தில் இருந்து புறப்பட்டு தொரப்பாடி தந்தை பெரியார் ஈ.வெ.ரா. அரசு பாலிடெக்னிக் கல்லூரி வளாகத்தில் அமைந்துள்ள பொதுப்பணித்துறை தொழில்நுட்ப கல்வி கோட்ட செயற்பொறியாளர் அலுவலகத்திற்கு இரவு சுமார் 21.35 மணிக்கு வந்து சேரப்பட்டது. அப்போது மேற்படி செயற்பொறியாளர் அலுவலகத்தில் இருந்து அரசு வாகனம் TN 23 G 1507-(Bolero) வெளியில் சென்றது. அதில் ஒரு டிரைவரும், அவருக்கு அருகில் உள்ள முன் சீட்டில் ஒரு பெண்மணியும் சென்றனர். மேற்படி வாகனத்தை பின் தொடர்ந்து சென்றபோது, அவ்வாகனம் தொரப்பாடி-அரியூர் ரோடில் உள்ள சுதா ரெஸ்டாரெண்ட் முன்பு சென்று நின்றது. மேற்படி பொலிரோ வாகனத்தில் இருந்த முன் சீட்டில் உட்கார்ந்திருந்த பெண்மணியிடம் இரு துறை திடீர் சோதனைக்குழுவினர் தங்களை அறிமுகப்படுத்திக்கொண்டு, அவரை விசாரிக்க, அவர் தன் பெயர் C.N.ஷோபனா என்றும், தான் Executive Engineer ஆக PWD Technical Education Division, வேலூரில் பணிபுரிந்து வருவதாக சொன்னார். மேலும், மேற்படி ஜீப்பின் அருகில் நின்றிருந்த ஓட்டுனரை பற்றி விசாரிக்க, அவர் தனது பெயர் பாபு என்றும், தந்தையார் பெயர் அண்ணாதுரை என்றும், தான் NMR ஓட்டுனராக திருமதி.ஷோபனா அவர்களிடம் கடந்த இரண்டு வருடங்களாக பணிபுரிந்து வருவதாக சொன்னார். பின்னர், திருமதி.ஷோபனா மற்றும் திரு.பாபு

UTL MEDIA

ஆகியோர்களிடம் இருதுறை திடீர் சோதனை குழுவினர் தங்களை சுயபரிசோதனை செய்து காண்பித்து, தங்களிடம் எந்த பணமோ, பொருளோ இல்லை என்பதை தெரிவித்து திருமதி.ஷோபனா அவர்கள் வந்த TN 23 G 1507 அரசு வாகனத்தை சந்தேகத்தின் அடிப்படையில் சோதனை செய்யப்பட்டது. மேற்படி வாகனத்தை சோதனை செய்ய பின் இருக்கையில் ஒரு பிரௌன் கலர் லேடீஸ் ஹேண்ட் பேக் இருந்தது. அந்த பேக்கை சோதனை செய்ய, அதில் சாவி, அடையாள அட்டை, மருந்து சீட்டு, காகிதங்களும், பணமும் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.4,000/- இருந்தது. அந்த பணம் குறித்து திருமதி.ஷோபனா அவர்களிடம் விசாரிக்க, அவர் அந்த பணம் தனது செலவிற்காக வைத்திருந்த பணம் என்று சொன்னதால், அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி லேடீஸ் ஹேண்ட்பேக்கிற்கு அருகில் ஓட்டல்களில் பயன்படுத்தும் வெள்ளை நிற துணிப்பை இருந்தது. அதை சோதனையிட, அதில் கட்டுக்கட்டாக பணம் இருந்தது. அதில் பணம் பத்து கட்டுகளாக 500 ரூபாய் நோட்டுகள் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, ரூ.5,00,000/- இருந்தது. அந்த பணம் குறித்து, திருமதி.ஷோபனா அவர்களிடம் விசாரிக்க, அவரால் அந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் சொல்லாமல் மௌனமாக இருந்தார். பிறகு மீண்டும் அவரை விசாரிக்க, அந்த பணம் எப்படி என் வாகனத்திற்கு வந்தது என்று தனக்கு தெரியாது என்று சொன்னார். மேற்படி வாகன ஓட்டுனர் திரு.பாபு என்பவரை விசாரிக்க, அவர் திருமதி.ஷோபனா அவர்கள் அலுவலகத்திலிருந்து புறப்படும்போது ஓட்டல்களில் பயன்படுத்தும் வெள்ளை நிற துணிப்பையை தன்னிடம் கொடுத்து, ஜீப்பின் பின் இருக்கையில் வைக்கும்படி சொன்னதால் வைத்ததாகவும், அதில் என்ன இருந்தது என்று தனக்கு தெரியாது என்றும் சொன்னார். மேற்படி இருவரும் பணம் ரூ.5,00,000/-க்கு தக்க முகாந்திரம் கூறாததால், மேற்படி பணத்தை வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. மேற்படி திருமதி.ஷோபனா அவர்களின் லேடீஸ் ஹேண்ட்பேக்கில் சில தாள்கள் மடித்து வைக்கப்பட்டிருந்தன. அவை (i) ஒரு சிறிய தாளில் முதல் வரிசையில் Walajapet - 17442691 கடைசி வரிசையில் 6,60,000/- என்றும் அதில் EE 1% - 257033, SDO 1 ½% என்று இருந்தது (ii) இந்தியன் வங்கி, தோரப்பாடி கிளையில் இருந்து 31.3.2021 ஆம் தேதி ரூ.1,00,000/-க்குண்டான பாங்க் ஆப் பரோடா, தர்மபுரி கிளையின் காசோலை எண்.001589 636012102 40014 29 ஆனது பாபு அண்ணாதுரை என்பவருக்குண்டான கணக்கு எண்.6863757158-ன் Counterfoil – 1, (iii) சிறிய துண்டுத்தாளின் மேலே A.M எனவும், முதல் வரிசையில் Ag.No.60 Rs.1,00,000/: TPEVR GPC Vellore எனவும், அதன் கீழே Ag.No.59 Rs.1,00,000/: TPGIT Vellore எனவும், தாளின் கீழே N. Vasu Ranipet என எழுதப்பட்டிருந்த ஒரு சிறிய தாள், (iv) சிறிய துண்டுத்தாளில் Gtmc I Part 2225000 எனவும், தாளின் கடைசியில் 268500 என எழுதப்பட்டிருந்த ஒரு சிறிய தாள், (v) A4 Sheet-ல் Granite Work என எழுதப்பட்டு கணக்குப்போடப்பட்ட தாள், இரு பக்கமும் எழுதப்பட்டிருந்த ஒரு சிறிய தாள் (vi) அரைத்தாளில் ARAVIND MANI CERAMICS Salem Bye pass road, Avadhanapatti, Krishnagiri, Cell 9841048284 என்று கையால் எழுதப்பட்டுள்ள பில் - அரை பக்கத்தாள் (vii) A4 தாளின் முதல் வரிசையில் All old balance clear (Rejp return excess:4,000) எனவும், கடைசி வரியில் 28/8/21 Paid

UTL MEDIA

Rs.30,000/- என எழுதப்பட்டிருந்த ஒரு தாள் (viii) A4 தாளில் தலைப்பாக Women College Villupuram எனவும், அதன் கடைசி வரிசையாக 7%=1,82,000 எனவும், பின் பக்கத்தில் பச்சை மையினால் எழுதப்பட்டிருந்த ஒரு தாள் (ix) A4 தாளில் தலைப்பாக Dharmapuri Sub-Division எனவும், அதன் கடைசி வரிசையில் Rs.4,25,000/- என எழுதப்பட்டிருந்தது. பின்பக்கத்தில் கணினியில் டைப் செய்யப்பட்டிருந்தது இரு கோடிட்டு அழிக்கப்பட்டிருந்த ஒரு தாள் (x) A4 தாளில் Contractor Payment என்ற தலைப்பிடப்பட்டும், அதன் கடைசி வரிசையில் 67) In the name of Thiru.Bhaskar, Ranipet Rs.13115843 தாள் -1 மற்றும் சென்னை-25 தொழில்நுட்ப கல்வி வட்டம், தலைமைப்பொறியாளர் (பொது) அவர்களின் செயல்முறைகள் குறிப்பாணை எண்.இ1/2185/2019, நாள்:22.06.2021 அசல் தாள் -1 மேற்படி 11 ஆவணங்களும் வழக்கின் நிமித்தம் கைப்பற்றப்பட்டது. பின்னர், ஓட்டுனர் திரு.பாபு என்பவரை சந்தேகத்தின் அடிப்படையில் திரேக சோதனை செய்ய, அவரது பேண்ட்டின் வலது பக்க முன் பாக்கெட்டில் ஒரு மணிபர்ஸ் இருந்தது. அந்த மணிபர்ஸை சோதனை செய்ய, அதில் பணம் ரூ.5,400/- இருந்தது. அந்த பணம் குறித்து அவரிடம் விசாரிக்க, அவர் தான் தீபாவளிக்காக புதுத்துணி வாங்க வைத்திருந்த சொந்த பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.5,400/- அவரிடமே திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் சோதனை சம்பந்தமான செயல்முறையை மேற்படி சுதா ரெஸ்டாரெண்ட்டின் கேஷியர் திரு.முத்தையா என்பவரிடம் சொல்லி, சுதா ரெஸ்டாரெண்ட் ஓனர் திரு.சுதாகர் அவர்களிடம் அனுமதி பெற்று, ரெஸ்டாரெண்ட்டிற்கு வெளியில் உள்ள தகரஷீட் போட்ட கூரையின் கீழ் இருந்த மேஜை மீது வைத்து தயார் செய்யப்பட்டது. இது தொடர்பாக செயற்பொறியாளர் திருமதி.சோபனா அவர்களிடமும் ஓட்டுனர் திரு.பாபு என்பவரிடமும் தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது 03.11.2021 அன்று 00.30 மணிக்கு முடிக்கப்பட்டது. மேற்படி வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர், திருவண்ணாமலை, கள்ளக்குறிச்சி, கிருஷ்ணகிரி, தருமபுரி மற்றும் விழுப்புரம் மாவட்டங்களின் ஒப்பந்ததாரர்களால் மேற்கொள்ளப்பட்ட ஒப்பந்த பணிகளுக்குண்டான Bill Sanction செய்வதற்காகவும், காசோலைகளை வழங்குவதற்காகவும் மற்றும் இதர வேலைகளுக்காகவும் இலட்சக்கணக்கில் கையூட்டு பெறும் திருமதி.ஷோபனா அவர்கள் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். மேலும் திடீர் சோதனையின் போது கைப்பற்றப்பட்ட லஞ்ச பணம் ரூ.5,00,000/-, 11 ஆவணங்கள், நான் பதிவு செய்த இரண்டு வாக்குமூலங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டு தணிக்கையின் போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றையும் தங்களிடம் ஒப்புவிக்கிறேன். xxxxxxx 03/11/2021 C. முருகன்,மாண்ட. துணை ஆய்வுக்குழு அலுவலர், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம், வேலூர்-9.

Sir,

Received the complaint on 03-11-2021 at 01.30 hrs and registered FIR in Vellore V&AC Cr.No.18/2021, u/s 7 of the Prevention of Corruption Act 1988 as amended by the Prevention of Corruption (Amendment)Act 2018 Sd/-XXXXXX(S.VIJAY) INS/V&AC/VLR.

The FIR in original along with the complaint, Joint Surprise Check Proceedings in original sent to Hon'ble CJM and Special Judge, Vellore and other copies to the officers concerned.

03/11/2021

(S.VIJAY)

INS/V&AC/VLR.